மாட்டேன் என்றும், இத்தகைய சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எவரும் அறவே ஈடுபடக்கூடாது என்பதையும் நான் இங்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன். மற்றொரு கட்சி அலுவலகத்திற்குள் நுழைந்து அங்குள்ள சொத்துகளுக்குச் சேதம் விளைவித்து, அங்குள்ள பொருட்களை முறைகேடாக எடுத்து வந்துள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. சுந்தரம் என்பவர் மீது உடனடியாகச் சட்டப்படி தக்க நடவடிக்கை காவல் துறை எடுக்க வேண்டுமென்று, சென்னை மாநகரக் காவல் துறை ஆணையருக்கு உத்தரவிட்டுள்ளேன். மேலும், தனது மோசமான செய்கையினால், கட்சிக்கும், கட்சித் தலைமைக்கும் அவப்பெயர் விளைவித்துள்ள திரு. சுந்தரம் என்பவரை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து நீக்கி உத்தரவிட்டுள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், திரு. சுந்தரத்துடன் இந்தச் சட்டவிரோதமான செயலில் ஈடுபட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மகிழன்பன், உதயகுமார், மாரிமுத்து, ராஜாபாதர், குபேரன் ஆகிய 5 பேரையும், கழகத்திலிருந்து நீக்கி வைத்துள்ளேன் என்பதையும் அவர்கள்மீதும் காவல் துறை தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளேன் என்பதையும் தெரிவித்துகொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். (குறுக்கீடுகள்) என்ன சொல்லுங்கள்.

திரு. மு.பெ. சாமிநாதன்: நான் 6, 7 அறிவிப்புகள் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அறைக்கு வாருங்கள் பேசி அதை முடிவு செய்வோம். (குறுக்கீடுகள்) நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம். திரு. புகழேந்தி.

முற்பகல் 11-20

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை நடைபெற்றபோதே கவன ஈர்ப்பு கொடுத்து இருக்கிறேன்... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பு அறிவிப்பு தானே, அறைக்கு வாருங்கள் பேசலாம். (குறுக்கீடு) திரு. மணி, என்ன சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதிய ஜனதா அலுவலகம் தாக்கப்பட்டது சம்பந்தமாக நானும் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்து இருந்தேன்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, இது கவன ஈர்ப்பு அல்ல. விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை.

திரு. ஜி.கே. மணி: அதில் இதைச் சேர்த்துச் சொல்லி இருக்கலாம் அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, இது கவன ஈர்ப்பு அல்ல. நான் முதலில் சொன்னது நான் அறிவித்த அறிவிப்பு. விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அறிக்கை கொடுக்கும்போது கவன ஈர்ப்பாக அதை எடுப்பதில்லை. (குறுக்கீடுகள்)

திரு. மு.பெ. சாமிநாதன்: குடிநீர்ப் பிரச்சினை குறித்து . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது ஆய்வில் இருக்கிறது. அறைக்கு வாருங்கள் பேசலாம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: சிதம்பரம், தஞ்சாவூர், தாலுகாக்களில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படவில்லை. அது குறித்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எனது ஆய்வில் இருக்கிறது; அறைக்கு வாருங்கள், பேசி முடிவு செய்யலாம். திரு. இ. புகழேந்தி.

5. வரவு-செலவுத் திட்டம், 2002-2003, பொது விவாதம்

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்திலே கலந்துகொள்கிற வாய்ப்பினை அளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையின் தொடக்கத்திலேயே, இரண்டாவது பக்கத்திலேயே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், 2002-2003 ஆம் ஆண்டுக்கான இந்த வரவு செலவுத்